सत्यमेव जयते

# भारत का राजपत्र
# The Gazette of India
# இந்திய அரசிதழ்

असाधारण

**EXTRAORDINARY**

**சிறப்பிதழ்**

भाग XV अनुभाग 1

**Part XV Section 1**

பகுதி XV பிரிவு 1

प्राधिकार प्राकारित

**PUBLISHED BY AUTHORITY**

அதிகாரத்துடன் வெளியிடப்பட்டது

---

नई दिल्ली, सोमवार, 6 मार्च, 2000/1922 सका

New Delhi, Monday, 6th March 2000/1922 Saga

*புது தில்லி, 2000, மார்ச் 6ஆம் நாள் திங்கட்கிழமை/1922 சக*


---

**Ministry of Law, Justice and Company Affairs**

(Legislative Department), New Delhi

*சட்ட, நீதி மற்றும் நிறும அலுவல்கள் அமைச்சகம் (சட்டமியற்றுத் துறை), புதுதில்லி*

The translation in Tamil of the Judicial Officers Protection Act, 1850 (18 of 1850), The Powers of Attorney Act, 1882 (7 of 1882), The Prevention of Seditious Meetings Act, 1911 (10 of 1911), The Destructive Insects and Pests Act, 1914 (2 of 1914), The Collections of Statistics Act, 1953 (32 of 1953), The State Armed Police Forces (Extension of Laws) Act, 1952 (63 of 1952), The Foreign Jurisdiction Act, 1947 (47 of 1947), are hereby published under the Authority of the President and shall be deemed to be the Authoritative Texts thereof in Tamil under Clause (a) Section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973).

நீதித்துறை அலுவலர்கள் பாதுகாப்புச் சட்டம், 1850 (18/1850), பகர அதிகாரஆவணச் சட்டம், 1882 (7/1882), அரசாங்கத்திற்கு எதிரான கிளர்ச்சிக் கூட்டங்கள் தடுப்புச் சட்டம், 1911 (10/1911), அழிவு செய்யும் பூச்சிகள் மற்றும் நாசகாரப் பூச்சிகள் சட்டம், 1914 (2/1914), புள்ளி விவரங்களைத் தொகுத்தல் சட்டம், 1953 (32/1953), மாநில ஆயுதக் காவற்படைகள் (சட்டங்கள் நீட்டிப்பு) சட்டம், 1952 (63/1952), அயல்நாட்டு அதிகாரவரம்புச் சட்டம், 1947 (47/1947), ஆகியவற்றின் தமிழ் மொழிபெயர்ப்பு, குடியரசுத் தலைவரின் அதிகாரத்தின்படி இதன்மூலம் வெளியிடப்படுகின்றன. அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 (50/1973) இன்பிரிவு 2இன் கூறு (அ) இன்படி இவையே தமிழில் அதிகாரவுரிமைப்படியான வாசகங்களாகக் கொள்ளப்படுதல்வேண்டும்.

[Price Rs. 22.00]

# மாநில ஆயுதக் காவற்படைகள் (சட்டங்கள் நீட்டிப்பு) சட்டம், 1952

## (சட்ட எண் 63/1952)

[1952, ஆகஸ்ட் 22]

ஏதேனும் மாநிலத்தின் ஆயுதக் காவற்படை தொடர்பாக அந்த மாநிலத்தில் செல்லாற்றலிலுள்ள ஒழுங்குநடவடிக்கை சார்ந்த சட்டங்களை, சொல்லப்பட்ட படையின் உறுப்பினர்கள் அந்த மாநிலத்திற்கு வெளியே பணிபுரியும்போது அவர்களுக்கு நீட்டிப்பதற்கு வகைசெய்வதற்கான ஒரு சட்டம்.

இது நாடாளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-

குறுந்தலைப்பு மற்றும் அளாவுகை.

1. (1) இந்தச் சட்டம், மாநில ஆயுதக் காவற்படைகள் (சட்டங்கள் நீட்டிப்பு) சட்டம், 1952 என்று வழங்கப்பெறும்.

(2) இது, இந்தியா முழுவதையும் அளாவி நிற்கும்.

பொருள் வரையறை.

2. இந்தச் சட்டத்தில் “ஆயுதக் காவற்படை” என்பது, அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட செய்சட்டங்களில் எதனாலும் அமைக்கப்பட்ட காவற்படை எதுவும் என்று பொருள்படும்.

ஏதேனும் மாநிலத்தில் ஒழுங்குமுறை சார்ந்த சட்டங்களை அந்த மாநிலத்தின் ஆயுதக் காவற்படையின் உறுப்பினர்கள் அந்த மாநிலத்திற்கு வெளியே பணிபுரிகிற போது அவர்களுக்கு நீட்டித்தல்.

3. ஒரு மாநிலத்தின் ஓர் ஆயுதக் காவல் படையில் தனிப் பிரிவு எதுவும் தனித்தோ அல்லது ஏதேனும் பிற மாநிலத்தின் காவற்படையுடன் இணைக்கப்பட்டோ அந்தப் பிற மாநிலத்தின் பகுதியில் பணிபுரிகிறவிடத்து, காவற்படைச் சட்டம், 1888 இன் பிரிவு 3இல் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், சொல்லப்பட்ட தனிநிலைப் பிரிவின் உறுப்பினர் ஒவ்வொருவரும், அந்தப் பிற மாநிலத்திலுள்ள காவல்துறை அலுவலரின் பதவிப் பணிகளை ஆற்றுகையில், அவர், சொல்லப்பட்ட படை எந்த மாநிலத்துக்குச் சொந்தமானதோ அந்த மாநிலத்திற்குள் அந்தப் பதவிப் பணிகளை ஆற்றியிருந்தாற்போன்று, அவருக்குப் பொருந்தக்கூடிய ஒழுங்கு மற்றும் கட்டுப்பாடுகள் பொறுத்த அதே சட்டங்களுக்கு தொடர்ந்து உட்பட்டிருத்தல் வேண்டும்.

இணைப்புப் பட்டியலுடன் சேர்ப்பதற்கு அல்லது அதிலிருந்து விட்டுவிடுவதற்கு அதிகாரம்.

4. மைய அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, செய்சட்டம் எதனையும் இணைப்புப்பட்டியலுடன் சேர்க்கலாம், அல்லது அதிலிருந்து விட்டுவிடலாம், மற்றும் அத்தகையதோர் அறிவிக்கையை வெளியிட்டதன்பேரில், இணைப்புப்பட்டியல் அங்ஙனமே திருத்தம் செய்யப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

நீக்கறவு.

5. [நீக்கறவு செய்தல் மற்றும் திருத்தம் செய்தல் சட்டம், 1957இன் (36/1957) பிரிவு 2ஆலும் மற்றும் இணைப்புப்பட்டியல் Iஆலும் நீக்கறவு செய்யப்பட்டது.]

## இணைப்புப்பட்டியல்

*(பிரிவுகள் 2 மற்றும் 4ஐப் பார்க்க)*

1. வங்காள இராணுவக் காவற்படைச் சட்டம், 1892 (5/1892).

2. கிழக்கு எல்லைப்பகுதி சுழல் துப்பாக்கிகள் (வங்காளக் காலாட்படை) சட்டம், 1920 (வங்காளச் சட்ட எண் II/1920).

3. பம்பாய் மாநில சேமக்காவற்படைச் சட்டம், 1951 (பம்பாய் சட்ட எண் 38/1951).

4. மைய மாகாணங்கள் மற்றும் பீரார் சிறப்பு ஆயுத ஊர்காவற்படைச் சட்டம், 1942 (மை.மா. மற்றும் பீகார் சட்ட எண்7/1942).

5. மத்திய பாரதச் சிறப்பு ஆயுதப்படைச் சட்டம், சம்வார் 2007 (மத்திய பாரதச் சட்ட எண் 75/1950).

6. ஒரிசா இராணுவக் காவற்படைச் சட்டம், 1946 (ஒரிசா சட்ட எண் 7/1946)..

7. இராஜஸ்தான் ஆயுத ஊர்காவற்படைச் சட்டம், 1950 (இராஜஸ்தான் சட்ட எண் 12/1950).

8. இணைக்கப்பட்ட மாகாணங்கள் மாகாண ஆயுத ஊர்காவற்படைச் சட்டம், 1948 (இ.மா. சட்ட எண் 40/1948).